# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051877

1. District மாவட்டம்: DVAC    PS: காவல்நிலையம்: DVAC Hqrs. Chennai    Year: ஆண்டு: 2020    FIR No.: மு.த.அ. எண்: 18    Date: நாள்: 12-12-2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption    Sections பிரிவுகள்: 7, 7A and 12
   (ii) Act சட்டம்: (Amendment) Act 2018    Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல்: 12.12.2020    Date to : நாள் வரை: 12.12.2020
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்: 03.30 hrs    Time to : நேரம் வரை: 09.30 hrs.
   (b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 12.12.2020    Time நேரம்: at 09.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 12.12.2020    Time நேரம்: after Completing Registration of FIR

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: Poonamallee RTO checkpost at Nazarathpet, Chennai Approximately 30 kms. North West
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: S.VALLINAYAGAM    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: A.Subbiah
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு    (d) Nationality நாட்டினம்: Indian    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில்: Inspector of Police SIC-II    (g) Address முகவரி: Directorate of Vigilance & Anti-corruption MKN Road, Alandur, chennai-16

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   ① Tmt. R. Meenambal Motor Vehicle Inspector (Non-Technical) Poonamallee RTO checkpost at Nazarathpet, Chennai-600123
   ② Tr. M. Balasubramanian Pvt. Individual, chrompet, Chennai
   ③ Tr. Chinnaraj, Pvt. Individual, Melma Nagar, Poonamallee, Chennai

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —No delay—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties ~~stolen /~~ involved : Rs. 1,07,430/=
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Attached in the Separate Sheet

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / ~~directed~~ S.Vallinayagam Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S.Vallinayagam 12.12.2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.12.2020 at 12.00 hrs.

(S. VALLINAYAGAM)
Name: பெயர் Inspector of Police
Rank: நிலை Special Investigation Cell No. எண் ..........
VKAC, Chennai-16.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.18/2020, சட்ட பிரிவு 7, 7A மற்றும் 12 ஊ.த. (திருத்தம்) சட்டம், 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12-ன் தொடர்ச்சி பின்வருமாறு.</u>

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் (சு.வள்ளிநாயகம்) 11.12.2020-ம் தேதி மாலை பணியிலிருந்த போது கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில், கிடைத்த தகவலை உறுதி செய்து கொண்டு, பொது நாட்குறிப்பில் மாலை 5 மணியளவில் பதிவு செய்து பின் உயரதிகாரிகளின் அனுமதியை பெற்று இரண்டு அரசு சாட்சிகளை எடுத்துக் கொண்டு இன்று 12.12.2020 அதிகாலை சுமார் 03.30 மணி முதல் காலை 09.30 மணி வரை சென்னை, நசரத்பேட்டை, சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில் உள்ள பூந்தமல்லி போக்குவரத்து சோதனைச்சாவடி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டேன். சோதனை முடிவில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் பின்வருமாறு:

"

## <u>கைப்பற்றுதல் மகஜர்</u>

| | | |
|---|---|---|
| சோதனை நடைபெறும் அலுவலகம் | | பூந்தமல்லி போக்குவரத்து சோதனைச் சாவடி அலுவலகம்,<br>சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலை,<br>நசரத்பேட்டை, சென்னை-600 123. |
| சோதனை நடைபெறும்போது உடனிருந்த சாட்சிகள் | | (1) திரு.ச.ஜோயிதாஸ், ஆண் வயது 31<br>த/பெ.சத்தியதாஸ்,<br>வருவாய் ஆய்வாளர்,<br>கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம்,<br>திருமுல்லைவாயல், சோழன் நகர், சோழம்பேடு,<br>சென்னை-62.<br>(2) திரு.கு.டில்லிபாபு, ஆண் வயது 34<br>த/பெ.குப்பன்,<br>கிராம அலுவலர்,<br>கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம்,<br>சோரன்சேரி-பி (சேக்காடு)<br>ஆவடி, சென்னை-600 054. |
| சோதனை மேற்கொள்ளும் காவல் அலுவலர் | | திருமதி.எஸ்.ஜுடி அபிகெய்ல்<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வுப்பிரிவு,<br>ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>ஆலந்தூர், சென்னை-16. |

| | | |
|---|---|---|
| | | திரு.எஸ்.வள்ளிநாயகம்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வுப்பிரிவு,<br>ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>ஆலந்துார், சென்னை-16.<br><br>திருமதி.அ.சமீனா பானு,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வுப்பிரிவு,<br>ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>ஆலந்துார், சென்னை-16. |

சென்னை, நசரத்பேட்டை, சென்னை-பெங்களுர் நெடுஞ்சாலையில் உள்ள பூந்தமல்லி போக்குவரத்து சோதனைச் சாவடி அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள், சென்னையிலிருந்து வெளியூர் செல்லும் அனைத்து வகையான வாகனங்கள் மற்றும் வெளியூரிலிருந்து சென்னைக்கு உள்ளே வரும் அனைத்து வகையான வாகனங்களும் பூந்தமல்லி சோதனை சாவடியை கடந்து செல்லும்போது அவ்வாகனங்களை நிறுத்தி சோதனை செய்து ஆவணங்களை சரிபார்த்து மற்றும் உரிய அரசுப்பணியை செய்வதற்கு கையூட்டு பெறுவதாக நம்பகமான தகவல் எனது அலுவலகத்திற்கு கிடைத்தது. மேற்படி தகவலை நேற்று 11.12.2020 மாலை சுமார் 5 மணியளவில் அலுவலக பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டது. இந்த தகவலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை உயர் அதிகாரிகளுக்கு, காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வழியாக தகவல் தெரிவித்து பின் அவர்கள் அனுமதி அளித்ததின் பேரில் திடீர் சோதனை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

2) மேலும் திடீர் சோதனைக்கு இரண்டு சாட்சிகளை அனுப்பி வைக்க வேண்டி தாசில்தார், ஆவடி, சென்னை அவர்களிடம் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தன் பேரில் மேற்கண்ட இரண்டு சாட்சிகளும் இன்று 12.12.2020ந் தேதி அதிகாலை சுமார் 3.00 மணியளவில் ஆவடி பேருந்து நிலையம் எதிரில் அய்யார் பவன் ஹோட்டல் முன்பு வந்திருந்தனர். அங்கு காத்திருந்த நான் மேற்சொன்ன சாட்சிகளை அடையாளம் கண்டுகொண்டு அவர்களிடம் எங்களை அறிமுகம்

செய்து தகவலை தெரிவித்து மேற்படி பூந்தமல்லி போக்குவரத்து சோதனைச் சாவடி அலுவலகத்தில் சோதனை செய்ய உள்ள விவரத்தை தெரிவித்தோம். மேற்படி இரண்டு சாட்சிகளும் சோதனையின் போது சாட்சியாக இருக்க ஒப்புக்கொண்டனர். இன்று (12.12.2020) அதிகாலை சுமார் 3.30 மணியளவில் பூந்தமல்லி போக்குவரத்து சோதனைச் சாவடி அலுவலகத்தில் சோதனை தொடங்கப்பட்டது.

3) சோதனை நடைபெறவுள்ள பூந்தமல்லி போக்குவரத்து சோதனைச் சாவடி அலுவலகம் சென்னை, நசரத்பேட்டையில் கிழக்கு மேற்காக செல்லும் சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில் தெற்கு பகுதியில் இயங்கி வருகிறது. மேற்படி அலுவலகத்தின் நுழைவாயில் வடக்கு நோக்கி காணப்படுகிறது. மேற்படி அலுவலகத்தில் உள்ளே நுழைந்ததும், எங்களையும் சாட்சிகளையும் அறிமுகம் செய்து சோதனை செய்யப் போகும் விவரத்தை தெரிவித்தேன். அலுவலகத்தின் மேற்கு பக்கத்தில் வடக்கு நோக்கி இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் மீனாம்பாள் என்றும் தான் இந்த சோதனைச்சாவடி அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக (தொழில்நுட்பமல்லாத அலுவலர்) பணியாற்றி வருவதாகவும், இந்த சோதனைச்சாவடியை கடந்து செல்லும் வாகனங்களின் பர்மிட், உரிய வரி செலுத்தாமல் சோதனைச்சாவடியை கடந்து செல்லும் ஆம்னி பேருந்துகளை சோதனை செய்து வரி வசூல் செய்வது மற்றும் சோதனையின்போது முறையான ஆவணங்கள் இல்லாமல் உள்ள வாகனங்களுக்கு Compound Fees (Without Trip Sheet, Over load, Without Uniform etc.,) வசூல் செய்வது ஆகிய பணிகளை கவனித்து வருவதாகவும் தெரிவித்தார். இந்த சோதனைச்சாவடியில் நான்கு மோட்டார் வாகன ஆய்வாளர்கள் சுழற்சி முறையில் காலை 8 மணிமுதல் மறுநாள் காலை 8 மணிவரை பணி செய்து வருவதாக தெரிவித்தார். அவர் நேற்று 11.12.2020 இரவு 8 மணி முதல் மேற்படி சோதனைச்சாவடியில் பணியில் இருப்பதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டதற்கு தனது முன்புறத்தில் உள்ள டேபிள் டிராயரிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை அரசு சாட்சிகளிடம் கொடுத்து எண்ணி பார்த்தபோது பணம் ரூ.36,860/- இருந்தது. அவற்றின் விவரம் (Rs.2000x2; Rs.500x51; Rs.200x14; Rs.100x8; Rs.50x74; Rs.20x1; Rs.10x4). இந்த பணம் குறித்து கேட்டதற்கு எந்த பதிலும் கூறவில்லை. இந்த பணம்

ரூ.36,860/- லஞ்சமாக வாங்கிய பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது கைப்பையை சோதனை செய்தபோது அதில் பணம் ரூ.2000/- இருந்தது (Rs.500x4) மேற்படி பணம் ரூ.2000/- குறித்து திருமதி.மீனாம்பாளிடம் கேட்டதற்கு அவரது செலவிற்காக வீட்டிலிருந்து எடுத்து வரப்பட்ட சொந்த பணம் என்று தெரிவித்தார். மேலும் இன்றைய தேதியில் மேற்படி பூந்தமல்லி சோதனைச்சாவடி அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பண இருப்பு பதிவேட்டில் சொந்தப் பணம் ரூ.2000/- என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆதலால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு பணம் ரூ.2000/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

4) மேலும் அலுவலகத்தின் மேற்கு பக்கத்தில் கிழக்கு நோக்கி ஒரு நபர் நின்று கொண்டு சோதனை சாவடியில் நிறுத்தப்படும் வாகனங்களின் ஆவணங்களை சரிபார்த்து வாகன ஓட்டுநர்களிடம் பணம் வசூலித்துக் கொண்டிருந்தார். அந்த நபரை விசாரித்த போது தனது பெயர் பாலசுப்பிரமணியன் என்றும் தான் எண்.67, 11வது தெரு, வினோபாஜி நகர், அஸ்தினாபுரம், குரோம்பேட்டை, சென்னை-64 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், இந்த சோதனைச்சாவடி அலுவலகத்தில் செக்ஷன் ரைட்டராக காலை 8 மணி முதல் மறுநாள் காலை 8 மணிவரை தினக்கூலி அடிப்படையில் கடந்த 7 வருடங்களாக பணியாற்றி வருவதாகவும், இதற்காக தினமும் ரூ.1000/- ரொக்கமாக பணியில் இருக்கும் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் கூலியாக கொடுப்பதாக தெரிவித்தார். மேலும் தான் இந்த சோதனைச்சாவடியில் வாகனங்களை சோதனை செய்வதற்கு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு உதவியாக இருந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டதற்கு தனது முன்புறத்தில் உள்ள டேபிள் டிராயரிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை அரசு சாட்சிகளிடம் கொடுத்து எண்ணி பார்த்தபோது பணம் ரூ.39,160/- இருந்தது. அவற்றின் விவரம் (Rs.2000x3; Rs.500x61; Rs.200x8; Rs.100x10; Rs.50x1; Rs.10x1). இந்த பணம் குறித்து கேட்டதற்கு எந்த பதிலும் கூறவில்லை. இந்த பணம் ரூ.39,160/- லஞ்சமாக வாங்கிய பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவருக்கு அருகே உள்ள டேபிளின் மேல் காணப்பட்ட வாகனங்களின் பதிவு எண்கள் எழுதப்பட்ட 3 தாள்கள் தொடர்பாக

அவரிடம் விசாரித்தபோது சோதனைச்சாவடியில் சோதனை செய்த வாகனங்களின் விவரங்கள் பற்றிய குறிப்பு என்றும், அந்த குறிப்பில் NP என்பது National Permit என்பதை குறிக்கும் என்று தெரிவித்தார். மேற்படி விவரங்களை Vehicle Movement Registerல் பதிவு செய்வதற்காக தனித்தாளில் எழுதியதாக தெரிவித்தார்.

5) மேலும் அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது சோதனைச்சாவடி அலுவலத்தின் உள்ளே கிழக்கு பக்கத்தில் உள்ள ஆவண அறைக்கு அழைத்து சென்று போக்குவரத்து சோதனைச்சாவடி பூந்தமல்லி ரொக்கப் பதிவேடு ஆரம்ப தேதி 25.03.2013 முடிவு தேதி 22.10.2013 என்ற பதிவேட்டின் உள்ளே இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை அரசு சாட்சிகளிடம் கொடுத்து எண்ணி பார்த்தபோது பணம் ரூ.6,910/- இருந்தது. அவற்றின் விவரம் (Rs.500x11; Rs.200x3; Rs.100x7; Rs.50x2; Rs.10x1). மேலும் போக்குவரத்து சோதனைச்சாவடி பூந்தமல்லி August பதிவேடு ஆரம்ப தேதி 01.08.12 முடிவு தேதி 31.08.12 என்ற பதிவேட்டின் உள்ளே இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை அரசு சாட்சிகளிடம் கொடுத்து எண்ணி பார்த்தபோது பணம் ரூ.24,000/- இருந்தது. அவற்றின் விவரம் (Rs.2000x3; Rs.500x36). இந்த பணம் குறித்து கேட்டதற்கு வாகன சோதனையின்போது வசூல் செய்யப்பட்ட பணத்தை அவ்வப்போது மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிவுறுத்தலின் பேரில் ஆவண பதிவறையில் உள்ள மேற்சொன்ன ஆவணங்களின் உள்ளே மறைத்து வைத்ததாக தெரிவித்தார். சோதனையின்போது வாகன ஓட்டுநர்கள் மற்றும் கிளினர்கள் ஆகியோரிடம் லஞ்சமாக வாங்கிய மொத்தப் பணம் ரூ.30,910/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

6) மேலும் சோதனைச்சாவடி அலுவலகத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் இருக்கைக்கு பின் இருக்கையில் வடக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரித்த போது தனது பெயர் பாஸ்கரன் என்றும் தான் இந்த சோதனைச்சாவடி அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது தனது மணிபர்சிலிருந்து பணம் ரூ.260/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அவற்றின் விவரம் (Rs.100x1; Rs.20x2; Rs.10x11; Rs.5x2). மேற்படி பணம் ரூ.260/- குறித்து திரு.பாஸ்கரனிடம் கேட்டதற்கு

அவரது செலவிற்காக வீட்டிலிருந்து பணம் ரூ.540/- எடுத்து வந்ததாகவும், அதில் தனது செலவீனம் போக பணம் ரூ.260/- வைத்திருந்ததாக தெரிவித்தார். மேலும் இன்றைய தேதியில் மேற்படி பூந்தமல்லி சோதனைச்சாவடி அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பண இருப்பு பதிவேட்டில் சொந்தப் பணம் ரூ.540/- என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆதலால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர் வைத்திருந்த பணம் ரூ.260/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

7) மேலும் சோதனைச்சாவடி உள்ளே நுழையும்போது கிழக்கு பக்கத்தில் உள்ள கணிணி டேபிளின் அருகே ஒரு நபர் தரையில் அமர்ந்திருந்தார். அந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் சின்னராஜ் என்றும் தான் எண்.23, படவட்டம்மன் கோவில் தெரு, மேல்மா நகர், பூந்தமல்லி, சென்னை-56 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தெரிவித்தார். இந்த சோதனைச்சாவடியில் Guide ஆக Shift அடிப்படையில் பணிபுரிந்து வருவதாகவும், ஒரு Shift க்கு ரூ.400/- கூலியாக அன்று பணியிலுள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் தருவதாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் குறித்து கேட்டதற்கு தனது முன்புறத்தில் உள்ள டேபிள் டிராயரிலிருந்து பணம் ரூ.500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். இந்த பணம் குறித்து கேட்டதற்கு எந்த பதிலும் கூறவில்லை. இந்த பணம் ரூ.500/- லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

8) மேலும் அவரிடமுள்ள பணம் குறித்து கேட்டபோது தனது மணிபர்சிலிருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சியிடம் கொடுத்து எண்ணிப்பார்த்ததில் பணம் ரூ.1,130/- இருந்தது. அவற்றின் விவரம் (Rs.200x2; Rs.100x7; Rs.20x1; Rs.10x1). மேற்படி பணம் ரூ.1,130/- குறித்து திரு.சின்னராஜிடம் கேட்டதற்கு அவரது சொந்த செலவிற்காக வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவரது பணம் ரூ.1,130/- அவரிடமே திருப்பி அளிக்கப்பட்டது.

9) மேலும் சோதனைச்சாவடி அலுவலகத்தின் கணிணி பணியிலிருந்த நபரை விசாரித்தபோது தனது பெயர் K.வினோத்குமார் என்றும் தான் எண்.305, ராஜீவ் காந்தி தெரு, திருமணம் கிராமம், பட்டாபிராம், சென்னை-72 என்ற விலாசத்தில் வசித்து வருவதாகவும், இந்த

சோதனைச்சாவடியில் வாகனங்களின் சோதனையின்போது Permit Charges, Fine, Tax, etc தொடர்பாக வசூல் செய்யப்படும் தொகையின் விவரங்களை கணிணியில் பதிவு செய்யும் பணியை செய்து வருவதாக தெரிவித்தார். மேலும் 11-Dec-2020 காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை வாகனங்களின் சோதனையின்போது வசூல் செய்யப்பட்ட (Permit Charges, Fine, Tax, etc) மொத்தப் பணம் ரூ.3,23,330/- என்றும், அதன் விவரங்களை போக்குவரத்து சோதனைச்சாவடி பூந்தமல்லி ரொக்கப் பதிவேட்டில் பக்கம் எண்.132ல் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அந்த பதிவேட்டை இரண்டு அரசு சாட்சிகளின் முன்னிலையில் ஆய்வு செய்தபோது மேற்படி விவரங்கள் குறிப்பிடப்பட்டு அதில் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.மீனாம்பாள் அவர்கள் கையொப்பம் செய்திருந்தார். அதனை தொடர்ந்து 11-Dec-2020 இரவு 8 மணி முதல் 12-Dec-2020 காலை 5 மணி வரை சோதனைச்சாவடியில் வாகனங்களின் சோதனையின்போது வசூல் செய்யப்பட்ட (Permit Charges, Fine, Tax, etc) மொத்தப் பணம் ரூ.74,370/- என்றும், இது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.மீனாம்பாள் அவர்களிடம் கேட்டபோது வாகன சோதனையின்போது வசூல் செய்யப்பட்ட மேற்படி பணம் சார்நிலை கருவூலம் பூவிருந்தவல்லி மூலமாக இந்தியன் வங்கி பூந்தமல்லி கிளையில் அந்தந்த கணக்கில் (Tax on Vehicles, Green Tax on Vehicles, MV Fees, MV Service charges) டெபாசிட் செய்யப்படும். மேற்சொன்ன தேதிகளில் வசூல் செய்யப்பட்ட பணத்தை உடனடியாக சார்நிலை கருவூலம் பூவிருந்தவல்லி மூலமாக இந்தியன் வங்கி பூந்தமல்லி கிளையில் செலுத்துமாறு மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.மீனாம்பாள் அவர்களிடம் அறிவுறுத்தப்பட்டது.

10) இந்த சோதனையின் முடிவில் கணக்கில் வராத லஞ்சப்பணம் ரூ.1,07,430/- கைப்பற்றப்பட்டது. இந்த கைப்பற்றுதல் மகஜர் இன்று 12.12.2020 அதிகாலை 3.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு காலை 9.30 மணியளவில் முடிக்கப்பட்டது. இந்த சோதனையின் போது அலுவலக பணிகளுக்கு இடையூறோ, அரசு உடைமைகளுக்கு சேதமோ ஏற்படாத வண்ணம் நடத்தி முடிக்கப்பட்டது.

ஒப்பம்/-ச.ஜோயிதாஸ்,
வருவாய் ஆய்வாளர்,
கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம்,
திருமுல்லைவாயல், சோழன் நகர்,
சோழம்பேடு, சென்னை-62.

ஒப்பம்/-கு.டில்லிபாபு,
கிராம அலுவலர்,
கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம்,
சோரன்சேரி-பி (சேக்காடு)
ஆவடி, சென்னை-600 054.

ஒப்பம்/-.சா.ஜீடி அபிகேய்ல்,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-எஸ்.வள்ளிநாயகம்,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-அ.சமீனா பானு,
காவல் ஆய்வாளர்,
சிறப்பு புலனாய்வு பிரிவு,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்/-R.மீனாம்பாள்,
மோட்டார் வாகன ஆய்வாளர்
(தொழில்நுட்பமல்லாத)
பூந்தமல்லி மோட்டார் வாகன
சோதனைச்சாவடி, நசரத்பேட்டை,
சென்னை-600 123

ஒப்பம்/-S.பாஸ்கரன்,
அலுவலக உதவியாளர்,
பூந்தமல்லி மோட்டார் வாகன
சோதனைச்சாவடி, நசரத்பேட்டை,
சென்னை-600 123

ஒப்பம்/-M.பாலசுப்பிரமணியன்,
(தனி நபர்)

ஒப்பம்/-P.சின்னராஜ்,
(தனி நபர்)

ஒப்பம்/-K.வினோத்குமார்,
(தனி நபர்)

Sir,

Based on this mahazar a case in DVAC Headquarters Cr.No.18/2020 u/s 7, 7A, 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered this day (12/12/2020) at 10 a.m on the spot. Sd/- S.Vallinayagam, Inspr of Police, SIC, DVAC, Chennai-16. "

S.Vallinayagam 12.12.2020
(S. VALLI NAYAGAM)
INSPECTOR OF POLICE
Special Investigation Cell
Vigilance & Anti Corruption,
Chennai - 600 016.